## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை

## அசல் வழக்கு எண். 22/2021

PW1 – திரு. போஸ் நாள். 10.12.2024

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திருமதி.ராமு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**குறுக்கு விசாரணை**

1. 1 முதல் 3 பிரதிவாதிகள் எனக்கு என்ன உறவுமுறை என்றால் சகோதரிகள் ஆவார்கள். 4 முதல் 7 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் என்றால் சரிதான். எத்தனை இடங்களுக்கு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. எனது தகப்பனார் பெயர் என்னவென்றால் பொன்னுச்சாமி. எனது தகப்பனாரின் தாய்மாமன் இராமையா தேவர் என்றால் சரிதான். மேற்படி இராமையா தேவரின் சொத்துககள் எனது தகப்பனாருக்கு வந்தது என்றால் சரிதான். என்ன என்ன சொத்துக்கள் எனது தகப்பனாருக்கு கிடைக்கப்பெற்றது என்றால் ஆறு இலக்கச் சொத்துக்கள்.

2. இவ்வழக்கில் இராமையாதேவரின் சொத்துக்கள் எத்தனை சொல்லப்பட்டுள்ளது என்றால் தெரியாது. 1 முதல் 4, 6, 7 தாவா சொத்துக்களுக்கு 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான், எனது தகப்பனார் இறந்த பின்னர் அவர் பெயரில் மாற்றப்பட்டுள்ளது. எனது தகப்பனார் இறந்து எவ்வளவு காலம் ஆகிறது என்றால் 35 ஆண்டுகள்

ஆகிறது. எனது தகப்பனார் உயிருடன் இறந்த காலத்திலேயே 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா மாற்றப்பட்டது என்றால் சரியல்ல.

3. தற்போது எனது பெயரில் உள்ள பட்டா எண்.466ல் கண்ட சொத்துக்கள் UDR காலத்தில் எனத தகப்பனார் பெயரில் இருந்தது என்றால் சரிதான். UDR காலத்தில் தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதி பெயரில் இருந்தது என்றால் சரியல்ல, எனது தகப்பனார் பெயரில் இருந்தது. தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதி மற்றும் அவரது வாரிசுகள் தான் UDR காலத்தில் இருந்தே இன்று வரை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, நான் 1ம் பிரதிவாதி மற்றும் 3ம் பிரதிவாதி கூட்டாக அனுபவம் செய்து வருகிறோம். மேற்படி கூட்டாக அனுபவம் செய்து வருகிறோம் என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதி மற்றும் அவரது வாரிசுகள் தான் UDR காலத்தில் இருந்தே வருவாய் துறையில் அனுபவ அடங்கல், நில வரி ரசீது மற்றும் பயிர் காப்பீடு மற்றும் அதன் இழப்பீடு பெற்று வருகிறார்கள் என்றால் சரிதான். எனது பெயரில் உள்ள பட்டா எண்.466ல் கண்ட சொத்துக்கள் தொடர்பாக 1, 2 பிரதிவாதிகள் பாகம் கேட்டு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த Os.No.65/2016 வழக்கானது அனுமதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

5. காளியம்மாளின் கணவர் அண்ணாமலை எந்த ஊரில் பிறந்தார் என்றால் வளனை கிராமம். மேற்படி அண்ணாமலை வீட்டுக்கு மாப்பிள்ளையாக வந்தார் என்றால் சரியல்ல. மேற்படி அண்ணாமலை சாத்தனூரில் காளியம்மாளுடன் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான், 20 வருடத்திற்கு முன்னர் வந்தார். அண்ணாமலை சாத்தனூரில் 45 ஆண்டுகள்கு மேலாக குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. அண்ணாமலை வீட்டுக்கு மாப்பிள்ளையாக வந்த போது

காளியம்மாளுக்கு தாவா சொத்துக்களை பாத்தியப்படுத்தி கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி பாத்தியத்தின் அடிப்படையில் தான் காளியம்மாள் அவரது பெயரில் பட்டா மாற்றி தொடர்ச்சியாக அனுபவம் செய்து வருகிறார் என்றும், மேற்படி விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல.

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை